தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை-6
ந.க.எண்.25154 / அ1 / இ2 / 2021 நாள்.14.02.2022

பொருள்: பள்ளிக் கல்வி - 2021-22ம் ஆண்டு ஆசிரியர்கள் பொதுமாறுதல் கலந்தாய்வு - நிர்வாகக் காரணங்களுக்காக பள்ளிக் கல்வி ஆணையரக மாறுதல் கலந்தாய்வு மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகள் தற்காலிகமாக ஒத்தி வைத்தல் சார்பு.

பார்வை: 1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021.
2)அரசாணை (நிலை)எண்.15 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.10.02.2022.
3)பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள்.30.12.2021, 06.1.2022, 07.1.2022 8.1.2022, 10.1.2022, 20.1.2022, 21.1.2022, 22.1.2022 மற்றும் 24.1.2022, 28.1.2022, 7.2.2022மற்றும் 10.02.2022.

-0-

பார்வை-1ல் காணும் அரசாணையில் 2021-22ம் கல்வியாண்டிற்கான ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் மற்றும் பதவி உயர்வுகள் சார்பாக நெறிமுறைகள் ஆணை வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பார்வை-2ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக பொதுமாறுதல்கள் / பதவி உயர்வுகளுக்கான கால அட்டவணைகள் வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக பார்வை-3ல் காணும் 28.1.2022 நாளிட்ட செயல்முறைகளில் 2021-22ம் கல்வியாண்டிற்கான ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான திருத்திய கால அட்டவணை வெளியிடப்பட்டது.

தற்போது நிர்வாகக் காரணங்களுக்காக பள்ளிக் கல்வி ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கு 15.02.2022 முதல்

நடக்கவிருந்த மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது. இது குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

தொடக்கக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள துவக்க/நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முந்தைய கலந்தாய்வுகளில் பணியிடத்துடன் ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களை தாய் ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளுக்கு மீள ஈர்த்தல், LKG/UKG வகுப்புகளைக் கையாள அதே ஒன்றியம்/வேறு ஒன்றியத்திலிருந்து பணியிடத்துடன் பணிநிரவல் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களை தாய் ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளுக்கு மீள ஈர்த்தல்/பணிநிரவல் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களை பள்ளிகளுக்கு ஈர்த்தல் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணிநிரவல் கலந்தாய்வு ஒன்றியத்திற்குள், கல்வி மாவட்டத்திற்குள், வருவாய் மாவட்டத்திற்குள், இடைநிலை ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு சார்பான கலந்தாய்வு தேதி 15.02.2022 அன்று வெளியிடப்படும்.

மேற்கண்ட தகவலை தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேற்படி ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

ஆணையருக்காக.

14/02/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

நகல்:

1. தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை-6
2. இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)
3. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
4. இணை இயக்குநர் (தொழிற் கல்வி)
5. சம்பந்தப்பட்ட பிரிவுகள்
6. EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை-6